# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR

## S.C. No. 56/2023

## PROSECUTION WITNESS No - 21

| | | | |
|---|---|---|---|
| **Name** | : புவனேஸ்வரன் | **Caste** | : |
| **Father Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of January 2026.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள். 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளார்கள்.

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை :

நான் தற்போது சண்டிகரில் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். கடந்த 10.09.2022 ஆம் தேதி ராஜேந்திரன் பார்த்துக்கொண்டிருந்த குவாரியல் 2 வருடமாக வேலை வேலை செய்து கொண்டிருந்தேன்.

ராஜேந்திரன் முதலாளியின் சகோதரர் ஆவார். நான் 2020 ம் ஆண்டில் மேற்சொன்னவரிடம் வேலைக்கு சேர்ந்தேன். குப்பத்தில் உள்ள அன்னை கிரசர்ஸ்யை தெரியும். அன்னை கிரசரின் உரிமையாளரை எனக்கு தெரியும். ஆஜர் 2 ஆம் எதிரி செல்வக்குமாரை சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார். என்னுடன் சந்தோஷ் என்பவர் ஹெல்ப்பராக பணி செய்தார். எனக்கு எதிரி சக்திவேலை தெரியும். ரஞ்சித்குமாரை எனக்கு தெரியாது. ஆஜர் 1 ஆம் எதிரி சக்திவேலை சாட்சி சரியாக பெயர் சொல்லி அடையாளம் காண்பித்தார். கடந்த 10.09.2022 ஆம் தேதியில் ஆஜர் 2 ம் எதிரியின் குவாரியில் வேலை செய்தேன் ராஜேஷ்பாறையில் வேலை செய்தேன். காலை 6 மணிக்கு பாறைக்கு சென்றால் மாலை 6 மணிக்கு தான் வருவேன். குவாரியைத்தான் பாறை என்று நான் குறிப்பிடுகிறேன். கொலையுண்டு இறந்துபோன ஜெகநாதனை எனக்கு தெரியாது.

<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 21.09.2022 ஆம் தேதி அரவக்குறிச்சி உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தீர்கள் என்றால் காவல்துறையினர் சொல்லிக்கொடுத்ததைத்தான் நான் சொன்னேன். <u>அரவக்குறிச்சி உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட குவிமுச **164** வாக்குமூலத்தில் **14** கையெழுத்துக்களும்</u>

என்னுடையது தான். அது அ.சா.ஆ.**45** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த குவிமுச **164** வாக்குமூலம் இது தான். அது அ.சா.ஆ-**46** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.09.2022 ஆம் தேதியிலும் அதற்கு முன்பு இரண்டு ஆண்டுகளும் அன்னை புளூ மெட்டல்ஸ் நிறுவனத்தில் ஹிட்டாச்சி ஆப்ரேட்டராக வேலை செய்தேன் என்று சொன்னால் சரிதான். நானும், சந்தோஷம், சக்திவேல் ஆகியோர் வேலை செய்தோம் என்று சொன்னால் சரிதான் சக்திவேல் சூபர்வைசராக வேலை செய்தார். 10.09.2022 ஆம் தேதி நீங்கள், சந்தோஷ், சக்திவேல், ரஞ்சித்குமார் கிரசரில் வேலை செய்துகொண்டிருந்தபோது அன்னை கிரசர் உரிமையாளர் 2ம் எதிரி செல்வக்குமார் வந்து சக்திவேலையும், ரஞ்சித்குமாரையும் கிரசருக்கு பின்னால் அழைத்து சென்று பேசியதாக குவிமுச 164 வாக்குமூலத்தில் கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் காவல்துறையினர் சொல்லிக்கொடுத்தவாறு நான் கூறினேன். 2ஆம் எதிரி செல்வக்குமார் உங்களிடமும், சந்தோஷிடமும் வந்து மாலை ஜெகநாதன் இந்த வழியில் சென்றால் தன்னிடம் சொல்லுங்கள் என்று கூறினாரா என்றால் இல்லை. அன்றைய தினம் மதியம் நீங்களும், சந்தோஷ் ஹிட்டாச்சி அருகில் நின்று கொண்டிருந்தபோது சக்திவேலுக்கு போன் வந்தது என்று சொன்னால் ஹிடடாச்சி பாறையில் தான் இருக்கும். ஜெகநாதன் இந்த வழியில் வரவில்லை என்று சந்தோஷிடம் நீங்கள் கூறியுள்ளீர்கள் என்10.09.2022 ஆம் தேதிறு சொன்னால் அவ்வாறு கூறவில்லை. பின்னிட்டு ஜெகநாதன் அந்த

வழியாக செல்வதை பார்த்துவிட்டு சக்திவேலுக்கு போன் செய்து ஜெகநாதன் செல்வதாக கூறினீர்கள் என்று சொன்னால் என்னிடம் மொபைலே இல்லை. பின்னிட்டு தோல்சண்முகம் காட்டிற்கு அருகில் ஜெகநாதன் வாகனம் மோதி இறந்துவிட்டதாக கிரசர் வழியாக சென்ற ஊர்க்காரர்கள் பேசிக்கொண்டதாக வாக்குமூலத்தில் கூறிவில்லை என்றால் சரியல்ல. மேலே கூறிய சங்கதிகளை நீங்கள் காவல்துறையினரிடம் கூறிவிட்டும், அரவக்குறிச்சி உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குவிமுச 164 வாக்குமூலத்தில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**1** ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

**2** ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

ஹிட்டாச்சி என்பது செயின் ரோலரில் இயங்கக்கூடிய ஒரு இயந்திரம் என்ற சொன்னால் சரிதான். ஜேசிபி போன்று ஹிட்டாச்சியில் டயர் கிடையாது என்று சொன்னால் சரிதான். ஹிட்டாச்சியை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு லாரியில் கொண்டு செல்வார்கள் என்று சொன்னால் சரிதான். ஹிட்டாச்சி பாறையில் துளை போடுவதற்கும், உடைப்பதற்கும் பயன்படுத்துவார்கள் என்ற சொன்னால் சரிதான். ராஜேந்திரன் பாறை என்பது எதிரி செல்வக்குமார் கிரசரில் இருந்து 500 மீட்டர் தள்ளி இருக்கும்

செல்வக்குமாருக்கு பாறை கிடையாது. குவாரிக்கும் கிரசருக்கு உங்களுக்கு வித்தியாசம் தெரியும் என்று சொன்னால் சரிதான். 700, 800 மீட்டர் தார் சாலையிலிருந்து தள்ளிதான் ராஜேந்திரன் பாறை இருக்கும். சந்தோஷ் என்பவர் பாறையில் தான் எனக்கு உதவியாளராக பணிபுரிந்தார்.

**3** ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

நீதிமன்ற கேள்வி

ராஜேந்திரன் என்பவருக்கு கல்குவாரி உரிமை உள்ளதா என்று எனக்கு தெரியாது. ஹிட்டாச்சியை நான் ஆஜர் 2 ம் எதிரி செல்வக்குமாருக்கு தான் ஓட்டினேன். 10.09.2022 ஆம் தேதியன்று குவாரியில் வெடி வைத்து வேலை செய்யவில்லை. மேற்சொன்ன குவாரியில் கடைசியாக எப்போது வேலை செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.01.23 18:16:54 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.